மகளிருக்கான கட்டணமில்லாப் பேருந்து சேவை - மாத சேமிப்பு ரூ.1000/-

தினசரி 49 இலட்சம் பெண்கள் பயணம்!

நிதிநிலை அறிக்கையில் ரூ.2,800 கோடி ஒதுக்கீடு!

சென்னை, ஜூலை 22-

தமிழ்நாட்டின் முதலமைச்சராக மு.க.ஸ்டாலின் அவர்கள் பொறுப்பேற்ற பிறகு கையெழுத்திட்ட 5 திட்டங்களில் ஒன்றான, சாதாரணக் கட்டண நகரப் பேருந்துகளில் மகளிருக்குக் கட்டணமில்லாப் பயணத் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டு இரண்டு ஆண்டு இரு மாதங்கள் நிறைவு பெற்றுள்ளன.

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தலைமையிலான அரசு 2021-ஆம் ஆண்டு மே மாதம் 7-ஆம் தேதி பொறுப்பேற்றது. தமிழ்நாட்டின் முதல்வராகப் பொறுப்பேற்றுக் கொண்டதும் தலைமைச் செயலகம் வந்த முதலமைச்சர் அவர்கள் திமுக அளித்த தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்றும் விதமாகவும், மக்கள் நலன் சார்ந்த திட்டங்களைச் செயல்படுத்தும் விதமாகவும் ஐந்து உத்தரவுகளில் கையெழுத்திட்டார்.

அதில் ஒன்றுதான் மகளிருக்குக் கட்டணமில்லா பேருந்து பயணம் என்பதாகும். மகளிருக்கு நகரப் பேருந்துகளில் கட்டணமில்லாப் பயணம் செய்வதற்கான அரசாணையை தமிழ்நாடு அரசு 2021-ஆம் ஆண்டு மே மாதம் 7ஆம் தேதியன்றே வெளியிட்டது.

தமிழ்நாடு முழுவதும் உள்ள அரசுப் போக்குவரத்துக் கழகக் கட்டுப்பாட்டில் இயங்கும் சாதாரணக் கட்டண நகரப் பேருந்துகளில் அனைத்து மகளிரும் கட்டணமில்லாமலும், பேருந்துப் பயண அட்டை இல்லாமலும் பயணம் செய்யலாம் என்று அந்த ஆணையில் கூறப்பட்டிருந்தது.

மறுநாளே நடைமுறைப்படுத்தப்பட்ட திட்டம்

மகளிருக்கு சாதாரணக் கட்டண நகரப் பேருந்துகளில் கட்டணமில்லாப் பயணத் திட்டம் மே 7ஆம் தேதி அறிவிக்கப்பட்டு, அன்றைய தினமே அரசாணை வெளியிடப்பட்டு மறுநாளே (மே 8) நடைமுறைக்கு வந்தது. இரவோடு இரவாக பேருந்துகளில் 'மகளிர் பயணம் செய்ய கட்டணமில்லை' என்ற ஸ்டிக்கர் ஒட்டப்பட்டு மிக வேகமாக பயன்பாட்டுக்கு வந்தது இந்தத் திட்டம்.

மகளிரின் ஏகோபித்த ஆதரவு, பலதரப்பட்ட விமர்சனங்கள், எதிர்ப்புகளுக்கு இடையே 2021-ம் ஆண்டு மே 8-ஆம் தேதி தொடங்கப்பட்ட இந்தத் திட்டத்தால் இதுவரை பேருந்தில் மகளிர் மேற்கொண்ட பயணங்களின் எண்ணிக்கை 311.61 கோடி. இதற்கான கட்டணத் தொகை ரூ. 4,985.76 கோடி.

திருநர்களுக்கும் கட்டணமில்லாப் பேருந்து பயண வசதி விரிவுபடுத்தப்பட்டதில் இதுவரை 18.04 இலட்சம் திருநர்கள் பயணம் மேற்கொண்டுள்ளனர். இதற்கான கட்டணத் தொகை ரூ. 288.64 இலட்சமாகும்.

ஏழை, எளிய பெண்களுக்கு இந்த திட்டம் பேருதவியாக அமைந்தது. வேலைக்குச் செல்லும் மகளிரால் கொண்டாடப்படும் திட்டமாக இது அமைந்துள்ளது.

75% பேருந்துகள் இயக்கம்

மாநிலத்தில் மொத்தம் இயக்கப்படும் 9,620 நகரப் பேருந்துகளில் 74.46 சதவீதப் பேருந்துகள் மகளிருக்காக கட்டணமில்லா பயணத்திற்காக இயக்கப்படுகின்றன.

2023-24-ம் நிதி ஆண்டில் ஒரு நாளைக்கு சுமார் 49.06 இலட்சம் மகளிர் பேருந்தில் பயணிக்கின்றனர். மொத்தம் பயணிக்கும் பயணிகளில் மகளிர் பங்கு 66.03% ஆகும். மூன்றாம் பாலினத்தவர்கள் சுமார் 3,013 பேர் நகர பேருந்துகளில் பயணிக்கின்றனர்.

திட்டக்குழு ஆய்வு

மாநிலத் திட்டக்குழுவின் உறுப்பினர் எம்.விஜய பாஸ்கர், கொள்கை ஆலோசகர்களுடன் இணைந்து, அரசுக்குச் சொந்தமான பேருந்துப் போக்குவரத்துக் கழகங்களில் பெண்களுக்கான கட்டணமில்லாப் பயணத்தால் அடையும் பயன்கள் குறித்த ஆய்வை மேற்கொண்டார். வெவ்வேறு தொழில் பிரிவுகளை சார்ந்த பெண் பயணிகளிடம் நடத்தப்பட்ட அந்த ஆய்வில், மகளிர் கட்டணமில்லா பேருந்து பயணத் திட்டத்தின் மூலம், ஒரு மாதத்திற்கு ரூ.756/- முதல் ரூ.1,012/- வரை அவர்கள் சேமிப்பது தெரியவந்துள்ளது. சராசரியாக மகளிர் சேமிக்கும் தொகை மாதம் ரூ. 888/- என கணக்கிடப்பட்டுள்ளது.

நாகப்பட்டினம், மதுரை மற்றும் திருப்பூர் ஆகிய மூன்று மாவட்டங்களை ஆய்வுக் குழுவினர் தேர்வு செய்து ஆய்வு நடத்தி தரவுகளைச் சேகரித்தனர். விவசாயப் பகுதியில் உள்ள பெண்களின் பயணம் பற்றி தெரிந்துகொள்ள நாகப்பட்டினமும், தொழில் நகரங்களில் பெண்கள் எப்படிப் பயணம் செய்கிறார்கள் என்பதைப் பார்க்க திருப்பூரும் தேர்வு செய்யப்பட்டது. வர்த்தக மையமாகவும், சுற்றுலாத் தலமாகவும் விளங்கும் மதுரையில் வசிக்கும் பெண்களின் பயணம் பற்றி தெரிந்து கொள்ள மதுரை தேர்வு செய்யப்பட்டதாகத் திட்டக் குழு தெரிவித்தது.

பெண்களின் கட்டணமில்லா பயணத்தையும் ஒழுங்குபடுத்தி, அதன் தரவுகளை வைத்திருக்க விரும்பிய தமிழ்நாடு அரசு, தனியாக மகளிருக்கு இலவச பயணம் என்று குறிப்பிட்டு டிக்கெட்டுகளையும் அச்சடித்து வழங்கி வருகிறது.

ரூ. 2,800 கோடி ஒதுக்கீடு

மகளிருக்கான கட்டணமில்லாப் பேருந்து பயணத்திற்காக அரசு 2023-24-ம் நிதி ஆண்டில் ரூ. 2,800 கோடியை நிதி நிலை அறிக்கையில் ஒதுக்கீடு செய்துள்ளது. திருநர்களின் பயணத்திற்கு அரசு ரூ. 1.21 கோடியை ஒதுக்கியுள்ளது.

பயனாளிகள் யார்?

கல்லூரி மாணவிகள், படிக்க நினைக்கும் மகளிர், சமூக அறிவைப் பெற நினைக்கும் பெண்களுக்கு, வீட்டில் இருந்தபடியே சிறு குறு தொழில் செய்யும் இல்லத்தரசிகளுக்கு இது மிகவும் பயனுள்ள திட்டமாகும்.

ஆயிரம், இரண்டாயிரம் சம்பளத்துக்கு அரை மணி நேரம் பயணம் செய்து வீட்டு வேலை செய்யும் பெண்களுக்கு பயனுள்ள திட்டமாகும்.

துணிக்கடைகளில், சிறு நிறுவனங்களில், தூய்மைப் பணியாளர்களாக, கட்டட வேலையில் சித்தாளாகப் பணிபுரியும் குறைந்த ஊதியம் வாங்கும் பெண்களும் இத்திட்டத்தால் பயனடைந்துள்ளனர்.

குழந்தைகளை அரசு மருத்துவமனைக்குக் கொண்டு செல்லும் தாய்மார்களுக்கும், குழந்தைகளை நாள்தோறும் பள்ளிக்கு அழைத்துச் செல்லும் பெண்களுக்கும், வீட்டில் கணவரின் வருமானம் போதாத சூழலில் வேலைக்குச் செல்ல தயாராகும் பெண்களுக்கும் இந்த திட்டம் பயனுள்ளது என்பதில் எள்ளளவும் சந்தேகமில்லை.

ஒரு நாட்டின் வளர்ச்சி, ஒரு மாநிலத்தின் வளர்ச்சி என்பது பெண்களின் வளர்ச்சியையும் கொண்டே கணக்கிடப்படுகிறது. பெண்களின் முன்னேற்றத்துக்காக பல்வேறு திட்டங்கள் கொண்டு வரப்படும் வரிசையில் இது முக்கியமான முன்னோடித் திட்டமாகும்.

நகர்ப்புற பயனர்களை விட கிராமப்புற குடும்பங்களைச் சேர்ந்த பெண்கள் இந்தத் திட்டத்தால் அதிகப் பயனடைகிறார்கள் என்பதும் திட்டக்குழு நடத்திய ஆய்வில் தெரியவந்துள்ளது. மேலும், மகளிர் கட்டணமில்லா பேருந்து பயணத் திட்டத்தின் பயனர்களில், 39 சதவீதம் பேர் பட்டியல் இனப் பெண்கள், 21 சதவீதம் பேர் மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த பெண்கள், 18 சதவீதம் பேர் பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த பெண்கள் எனவும் ஆய்வறிக்கை தெரிவிக்கிறது. பெண் பயணிகளில் கிட்டத்தட்ட 50 சதவீதம் பேர் 40 வயதுக்கு மேற்பட்டவர்கள் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

இந்த ஆய்வுக்காக எடுத்துக் கொள்ளப்பட்ட பெண்கள், தங்கள் பயணத் தேவைகளுக்காக குடும்ப உறுப்பினர்களைச் சார்ந்திருப்பது குறைந்திருப்பதாகவும், கவுரவமாக நடத்தப்படுவது, அதிகாரமளித்தல் ஆகியவற்றுக்கு இந்த திட்டம் பங்களிப்பதாகவும் கூறியுள்ளனர். இந்த திட்டத்தின் மூலம் சேமிக்கப்படும் தொகை, கூடுதல் வீட்டுச் செலவுகளுக்குப் பயன்படுவதாக பெரும்பாலான பெண்கள் கூறியுள்ளனர்.

சென்னையில்...

முன்னதாக, இக்குழுவினர் சென்னை மாநகரத்தில் ஆய்வு மேற்கொண்டனர். அதில், இத்திட்டத்தின் கீழ் பெண் பயணிகள் மாதத்திற்கு சுமார் 50 பயணங்களை மேற்கொள்வதாகவும், இதன் மூலம் மாதம் ஒன்றுக்கு ரூ.858 வரை அவர்கள் சேமிப்பதாகவும் தெரிய வந்துள்ளது. இந்த ஆய்வுக்காக, கோயம்பேடு - திருவொற்றியூர், தாம்பரம் - செங்கல்பட்டு மற்றும் பிராட்வே - கண்ணகி நகர் ஆகிய மூன்று வழித்தடங்கள் எடுத்துக் கொள்ளப்பட்டன.

மகளிர் நலன், மகளிர் மேம்பாட்டுக்கென திராவிட மாடல் அரசு செயல்படுத்தும் பல்வேறு திட்டங்களில் மகளிருக்கு சுய அதிகாரமளிக்க வகை செய்வதாக கட்டணமில்லா பேருந்து சேவை அமைந்துள்ளது என்றால் அது மிகையல்ல.

நெல்லை மாவட்டம் வடக்கன்குளம் ஊராட்சியில் இராதாபுரம், நாங்குநேரி, களக்காடு, பாளையங்கோட்டை மற்றும் சேரன்மகாதேவி ஆகிய ஊராட்சிகளைச் சேர்ந்த 831 ஊரக குடியிருப்பு பகுதிகளுக்கு ரூபாய் 605.75 கோடி மதிப்பில் கூட்டுக் குடிநீர் வழங்கும் திட்டப்பணியை சட்டபேரவைத் தலைவர் மு.அப்பாவு அவர்கள் துவக்கி வைத்து உரையாற்றினார். உடன் மாவட்ட ஆட்சியர் கார்த்திகேயன், மாவட்ட ஊராட்சி மன்ற குழு தலைவர் வி.எஸ். ஆர்.ஜெகதீஸ்,ஒன்றிய செயலாளர் ஜோசப்பெல்சி, பங்குத்தந்தை மார்ட்டின், வடக்கன்குளம் ஊராட்சி மன்ற தலைவர் ஜான்கென்னடி, மாவட்ட ஊராட்சி உறுப்பினர்கள் பாஸ்கர், ஜான்ஸ்ரூபா உள்பட அரசு அலுவலர்கள், கழக நிர்வாகிகள் பலர் உள்ளனர்.

மணிப்பூரில் பழங்குடியினப் பெண்கள் மானபங்கம்:

ஒன்றிய அரசு பொறுப்பேற்றே தீர வேண்டும்!

'தினகரன்' நாளேடு தலையங்கம்!

சென்னை, ஜூலை 22-

மணிப்பூரில் பழங்குடி இன பெண்கள் மானபங்கம் செய்யப்பட்டதற்கு ஒன்றிய பா.ஜ.க. அரசு பொறுப்பேற்றே தீர வேண்டும் என்று 'தினகரன்' நாளேடு தலையங்கம் எழுதியுள்ளது.

அது வருமாறு:-

மணிப்பூர் மாநிலத்தில் மெய்டீஸ், குக்கி இரு சமூகத்தினர் இடையே மோதல் வெடித்து அது கலவரமாக மாறியது. இதனால் அம்மாநிலத்தில் வன்முறை கட்டவிழ்க்கப்பட்டு தலைவிரித்தாடி வருகிறது. ஒன்றிய அரசு ராணுவத்தை பாதுகாப்புக்கு அனுப்பியும் அமைதிக்குமுவை ஏற்படுத்தியும் எந்த முன்னேற்றமும் ஏற்படவில்லை. ஒன்றிய உள்துறை அமைச்சர் அமித்ஷா அம்மாநிலத்தில் முகாமிட்டு பேச்சுவார்த்தை நடத்திய பிறகும் கலவரங்கள் குறைந்ததாக தெரியவில்லை. மணிப்பூர் பற்றி எரியும் போது அதுகுறித்து ஒரு வார்த்தைகூட பேசாமல் பிரதமர் மோடி கர்நாடக மாநில தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்டதற்கு காங்கிரஸ் முன்னாள் தலைவர் ராகுல்காந்தி உள்பட பல்வேறு கட்சி தலைவர்கள் கண்டனம் தெரிவித்தனர்.

தினகரன்

ஜூலை 21, 2023 வெள்ளிக்கிழமை

கொடூரத்தின் உச்சம்

மணிப்பூர் மாநிலத்தில் மெய்டீஸ், குக்கி இரு சமூகத்தினர் இடையே மோதல் வெடித்து அது கலவரமாக மாறியது. இதனால் அம்மாநிலத்தில் வன்முறை கட்டவிழ்க்கப்பட்டு தலைவிரித்தாடி வருகிறது. ஒன்றிய அரசு ராணுவத்தை பாதுகாப்புக்கு அனுப்பியும் அமைதிக்குமுவை ஏற்படுத்தியும் எந்த முன்னேற்றமும் ஏற்படவில்லை. ஒன்றிய உள்துறை அமைச்சர் அமித்ஷா அம்மாநிலத்தில் முகாமிட்டு பேச்சுவார்த்தை நடத்திய பிறகும் கலவரங்கள் குறைந்ததாக தெரியவில்லை. மணிப்பூர் பற்றி எரியும் போது அதுகுறித்து ஒரு வார்த்தைகூட பேசாமல் பிரதமர் மோடி கர்நாடக மாநில தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்டதற்கு காங்கிரஸ் முன்னாள் தலைவர் ராகுல்காந்தி உள்பட பல்வேறு கட்சி தலைவர்கள் கண்டனம் தெரிவித்தனர்.

இந்நிலையில் தான் பழங்குடியின பெண்கள் இருவரை மெய்டீஸ் சமூகத்தினர் நிர்வாணப்படுத்தி சாலையில் ஊர்வலமாக அழைத்து செல்வது போன்று சமூகவலைதளங்களில் வீடியோ வெளியாகி பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. மணிப்பூர் மாநிலத்தில் நடந்த கொடூரத்தின் உச்சமாக கருதப்படும் இச்சம்பவம் கடந்த மே மாதம் நடந்த பேரணியின் போது அரங்கேறியுள்ளது. இதில் இரு பெண்களையும் வயல் வெளியில் வைத்து கூட்டு பலாத்காரம் செய்து துன்புறுத்தியுள்ளனர்.

இந்தியா முழுவதும் அதிர்ச்சி அலைகளை ஏற்படுத்தியுள்ள இச்சம்பவத்துக்கு உச்சநீதிமன்றம் உள்பட காங்கிரஸ், திமுக உள்ளிட்ட கட்சிகள் கண்டனத்தை பதிவு செய்துள்ளன. மணிப்பூர் கலவரம் குறித்து வாய் திறக்காத பிரதமர் மோடி முதன்முறையாக கண்டனத்தை பதிவு செய்துள்ளார். மணிப்பூரில் நடக்கும் கலவரங்கள் குறித்து வெளியே பரவாமல் தடுக்க ஒன்றிய பாஜ அரசு அம்மாநிலத்தில் இணைய சேவையை துண்டித்தது. இருந்தாலும் விளையாட்டு வீராங்கனை, ஓய்வு பெற்ற ராணுவ வீரர் ஆகியோர் இணையதளத்தில் வீடியோவை வெளியிட்டு மணிப்பூர் கலவரத்தை கட்டுப்படுத்த உதவ வேண்டும் என்று கதறி கெஞ்சினர்.

உண்மை நிலவரத்தை எப்போதும் மறைக்கமுடியாது என்பது போன்று தற்போது பழங்குடியின பெண்கள் மானபங்கம் செய்யப்பட்ட சம்பவம் வெளிச்சத்துக்கு வந்துள்ளது. இந்த கொடுமைக்கு ஒன்றிய அரசு பொறுப்பேற்றே தீர வேண்டும்.

பாஜ ஆளும் மாநிலங்களில் உள்ள பிரச்னைகள் மற்றும் ஒன்றிய பாஜ அரசின் மக்கள் விரோத திட்டங்களை எதிர்க்கட்சிகள் கேள்வி கேட்கும் போதெல்லாம் அவர்களை அடக்குவதற்காகவும், மக்களின் கவனத்தை திசை திருப்புவதற்காகவும் அமலாக்கத் துறை, சிபிஐ, வருமானவரித்துறையை ஏவி பழிவாங்கும் நடவடிக்கையில் தான் ஒன்றிய அரசு கவனம் செலுத்திவருகிறது.

இந்திய மல்யுத்த கூட்டமைப்பின் தலைவரும் பாஜ எம்பியுமான பிரிட்ஜ் பூஷனுக்கு எதிராக மல்யுத்த வீராங்கனைகள் பாலியல் புகார் கூறி டெல்லியில் பல நாட்கள் போராட்டம் நடத்தியும் ஒன்றிய அரசு கண்டுகொள்ளவே இல்லை. அதே போன்று தற்போது மகாராஷ்டிர மாநில பாஜ துணை தலைவர் சோமையாவின் ஆபாச வீடியோ மராத்தி செய்தி சேனல்களில் வெளியாகி பரபரப்பாகியுள்ளது. இதில் பல அரசு பெண் அதிகாரிகளையும் அவர் மிரட்டி பலாத்காரம் செய்துள்ளது தெரியவந்துள்ளது. ஒன்றிய பாஜ அரசு முதலில் நாட்டின் கண்களாக போற்றப்படும் பெண்களின் பாதுகாப்பை உறுதி செய்ய வேண்டும் என்பதே சமூக ஆர்வலர்களின் எதிர்பார்ப்பாக உள்ளது.

இவ்வாறு 'தினகரன்' நாளேடு தலையங்கம் எழுதியுள்ளது.

பால்வளத்துறை அமைச்சர் த.மனோ தங்கராஜ் தலைமையில் சென்னை, நந்தனம் ஆவின் இல்லத்தில் நேற்று முன்தினம் (20.07.2023) அனைத்து மாவட்ட துணைப் பதிவாளர்கள் (பால்வளம்) மற்றும் மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றிய பொது மேலாளர்கள் உடனான ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது. இவ்வாய்வுக் கூட்டத்தில் மாவட்ட வாரியாக பால் உற்பத்தி மற்றும் பால் கொள்முதலை அதிகரிக்கவும், பால் மற்றும் பால் உப பொருட்களின் விற்பனையை அதிகரித்தல், அனைத்து ஒன்றியங்கள் மற்றும் இணையத்திலுள்ள பணியாளர்களின் பணித்திறன் மேம்பாடு, முந்தைய ஆய்வுக்கூட்டங்களில் வழங்கிய உத்தரவுகள் மீதான நடவடிக்கைகள் குறித்து ஆய்வு செய்து மேலும் மேம்படுத்த அறிவுரை வழங்கினார். பால்வளத்துறை இயக்குநர் மற்றும் மேலாண்மை இயக்குநர் டாக்டர் சு. வினீத், உயர் அதிகாரிகள் மற்றும் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

பேரறிஞர் அண்ணா வகுத்த நெறிவழி நின்று

முதல்வர் நடத்தும் திராவிட அரசியல்!

என் இனிய தமிழ்ச் சொந்தங்களே!

ஒன்றிய அரசுக்கு தி.மு.க. அரசை ஏன் பிடிக்கவில்லை? இவர்கள் கோவிந்தா கோவிந்தா என கூழை கும்பிடு போட மறுப்பது முதல் காரணம். டெல்லியாளர்களின் பக்குவமற்ற செயல்களையும் குட்டுகளையும் உடைப்பது இரண்டாவது காரணம். கொடுமைகளை...ஒன்றியத்தின் அக்கிரமங்களை அம்பலப்படுத்துவது அடுத்த காரணம்.

எல்லாவற்றிக்கும் மேலாக அவர்களின் கனவுத் திட்டமான சமய சன்மார்க்க அரசியலுக்கு மாற்று அரசியலை நாடு பூராகவும் பரப்பி அவர்களுக்கு நிரந்தரமான ஒரு எதிர் அலையை உருவாக்கிய நமது முதல்வரின் போக்கு ஏற்படுத்திய அச்சம் முக்கிய காரணமாகிறது.

அண்மையில் பெங்களூருவில் நடந்த எதிர்க்கட்சிகள் கூட்டம் அவர்கள் கலக்கத்தை அதிகப்படுத்தி உள்ளது. எதிரியே எனக்கு கண்ணுக்கெட்டிய தூரம் வரை தெரியவில்லை என மார்தட்டியவர்களுக்கு 28 கட்சிகள் ஒன்றாக இணைந்து பெங்களூருவில் நடத்திய கூட்டம் வயிற்றிலே புளியைக் கரைத்திருக்கிறது! தோல்வி பயம் ஏற்பட்டதும் அவர்கள் பேச்சும் நடவடிக்கைகளும் எப்படி எல்லாம் மாறி இருக்கிறது தெரியுமா? நாட்டிலே நிலவுகின்ற பஞ்சத்தை பற்றாக்குறை என்கிறார்கள். வஞ்சத்தை சட்டத்தின் கடமை என்கிறார்கள். லஞ்சத்தை கட்சிக்கான நன்கொடை என்கிறார்கள். கடன் சுமையை உதவித்தொகை என்கிறார்கள். மக்கள் படும் வேதனைகளை சோதனைகள் என்று சொல்லுகிறார்கள். பஞ்சாங்கத்தை நாடாளுமன்றத்தின் கீதை என்கிறார்கள்.

கண்ணகி கொலுமண்டபத்தில் நீதி கேட்டபோது பாண்டிய மன்னனின் கையில் இருந்து தவறி விழுந்து நீதியை நிலைநாட்டி மன்னனின் உயிரை குடித்த செங்கோலை புதிய நாடாளுமன்றத்தில் வைத்துவிட்டு அதற்கு புது விளக்கம் தர முற்படுகிறார்கள். நீதி நெறி வழுவாத பாண்டியன் எங்கே? மதரீதியாக ஆட்சி நடத்துகின்ற இவர்கள் எங்கே? உங்களுக்கு தேவையானது தர்ப்பை புல்லே தவிர செங்கோல் ஒரு கேடா? அத்தியாவசிய துறைகள் அனைத்தையும் தனியார் துறைகளுக்கு ஏலம் விட்டு வருகிறீர்கள். வெங்காய விலையை கட்டுப்படுத்த முடியவில்லை. அதன் விளைச்சலைப் பெருக்க முடியவில்லை. இறக்குமதி செய்கிறீர்கள். ஏழை விவசாயி விளைவிக்கும் அத்தனை விவசாய பொருட்களையும்...உப்பு உட்பட...யாவுமே கார்ப்பரேட் கம்பெனிகளுக்கு போய் சேருகின்ற வண்ணம் சட்டங்களை மாற்றி விட்டீர்கள்!

இன்றைய தினம் இஞ்சியின் விலை கிலோ ஆயிரத்தையும் தாண்டி விட்டது. ஆனால் விவசாயக் கூலி ஐநூறையும் தாண்டவில்லை. சாமானியர்களை சற்று சந்தோஷமாக வாழ வைத்துக் கொண்டிருந்த தெருவோரத்து கையேந்தி பவன்கள்... டீக்கடைகள்... பெட்டிக்கடைகள்... சிறுதானியக் கடைகள்... மெக்கானிக் செட்டுகள்... பழக்கடைகள்... பேப்பர் கடைகள்... எதையுமே தற்போது காண முடியவில்லை! அனைத்தையும் அழித்து கார்ப்பரேட் கம்பெனிகளுக்கு மறைமுகமாக தாரை வார்த்து விட்டீர்கள்! இதை வளர்ச்சி என்று வேறு சொல்லுகிறீர்கள். வளர்ச்சிதான் ஆனால் யாருக்கு? நிதி என்ற பெயரில் உங்களுக்கு கப்பம் கட்டும் கார்ப்பரேட்டுகளுக்கு!

இதையெல்லாம் பறி கொடுத்து விட்ட ஏழைகள் நடக்காத உங்களின் பொய்யான அறிவிப்புகளை நம்பி ஆங்காங்கே நீண்ட வரிசைகளில் காத்திருக்கிறார்கள்! zero Balance இல்அனைவருக்கும் வங்கிக் கணக்கு என்றீர்கள். ஸ்விஸ் வங்கியில் இருந்த இந்திய பண முதலைகளின் கறுப்பு பணத்தை வெள்ளைப் பணமாக்கி ஒவ்வொரு இந்திய குடிமகனின் வங்கிக் கணக்கிலும் 15 லட்சங்கள் வரவு வைக்கப்படும் என வாக்குறுதி கொடுத்தீர்கள்! மக்களும் உங்களை நம்பி தாங்கள் சிறுக சிறுக சேர்த்த தங்கள் சேமிப்புகளையும் வங்கிக் கணக்கில் கட்டினார்கள்.

நாடு எங்கும் வங்கிகளில் வைப்பு நிதி பல மடங்காக உயர்ந்தது! அந்தப் பணத்தை எல்லாம் பெரும் வியாபாரிகளுக்கு கடன் கொடுக்க சிபாரிசு செய்தீர்கள். அதில் பல கோடிகளை கடனாக பெற்ற மல்லையா... நீரவ் மோடி போன்றவர்கள் பெற்ற கடனை வங்கிகளுக்கு திருப்பி செலுத்தாமல் நாட்டை விட்டு தப்பி ஓடி விட்டார்கள். வெளிநாடுகளில் செல்வச் செழிப்போடு வாழ்கிறார்கள். நமது தாய் நாட்டின் எல்லையோர நிலப்பரப்பை நமது தாய் நாட்டின் எல்லையோர நிலப்பரப்பை ஆக்கிரமித்த சீனாவிடமிருந்து ஒரு அங்குல மண்ணைக் கூட உங்களால் மீட்க முடிய வில்லை.

ஏழை மக்களின் வங்கி சேமிப்பை கோடிக்கணக்கில் ஏப்பம் விட்ட திருட்டு ராஜாக்களையும் உங்களால் வெளிநாட்டில் இருந்து கைது பண்ணி இங்கே அழைத்து வர முடியவில்லை. இந்த லட்சணத்திலே வாகா எல்லையில் அபிநந்தனை பாகிஸ்தான் ராணுவம் மனமிரங்கி உங்களிடம் ஒப்படைத்ததை சாதனை என்கிறீர்கள்! ஏன் அந்த அபிநந்தனிடம் ஒரு விமானத்தை கொடுத்து அனுப்பி இந்த திருட்டு ராஜாக்களை வெளிநாட்டில் இருந்து பிடித்து வரச் சொல்லலாமே? வேண்டுமானால் காவல்துறைக்கான படிப்பு படித்த தமிழக ஆளுநரையும் அண்ணாமலையாரையும் அபிநந்தனோடு துணைக்கு அனுப்பலாமே? அதைச் செய்யாமல் ஆளுநரை ஒரு அதிகார மையம் ஆக்கி மாநிலங்களை ஆட்டிப் பார்க்கிறீர்கள்! முன்பிருந்த ஆட்சியாளர்களின் கையும் களவுமாக சிக்கிய குற்றங்களையும் சாட்சிகளையும் மறைத்து விட்டு- தற்போது ஆள்பவர்கள் மீது குற்றங்களை சுமத்தி உங்கள் கட்சியை எப்படியாவது அரியணையில் ஏற்ற சூழ்ச்சிகள் செய்கிறீர்கள். ஏழைகள் முதுகில் ஏறி பிரதமரின் பெயரில் பல இலவசத் திட்டங்களை அறிவித்து, மதம் என்ற உணர்ச்சி வெறியை ஏற்றி ஏழைகள் வாக்குகளை பெற்று மூன்றாவது முறையாகவும் நாடாள முயற்சி செய்கிறீர்கள்.

இரண்டு முறை ஆட்சி செய்த நீங்கள் சரியான வழியில் ஆட்சியை செலுத்தி இருந்தால் மூன்றாவது வெற்றியை மக்கள் தாமாகவே தேடி வந்து உங்கள் காலடியில் சமர்ப்பித்திருக்க மாட்டார்களா! நீங்கள் தவறான வழிகளை தேர்ந்தெடுத்து மாநிலங்களை மிரட்டி பணியவைக்க முயல வேண்டிய அவசியம் வந்திருக்குமா?

சித்தர்கள் வாழ்ந்த பூமியில் எத்தர்கள் பெருகி விட்டதை தமிழர்கள் நன்கு உணர்ந்து விட்டனர். ஆன்மிகமும் அரசியலும் ஒன்றல்ல என்ற உண்மை அனைவரும் அறிந்ததே. இரண்டும் பின்னிப் பிணைந்திருந்தால் கோவில்கள் வேறாகவும் கொலு மண்டபங்கள் வேறாகவும் இருக்க வேண்டிய அவசியம் வந்திருக்காதே? ராமர் கோவில் அயோத்தியிலும் புதிய நாடாளுமன்றம் டெல்லியிலும் இருக்குமா? ராமர் கையில் வில்லும் நாடாளுமன்றத்தில் செங்கோலும் இருப்பது எதைக் காட்டுகிறது? இது மக்களுக்கு புரியாதா?

ராமரின் புகழ் கேட்க கேட்க கேட்கத் திகட்டாத தேனாக இருக்கலாம். ஆனால் மக்கள் கேட்பது மூன்று வேளை உணவு! அதை இன்று வரை டெல்லி தரவில்லையே என்பது தானே பிரச்சனை! புகழை வைத்து வயிற்றுப் பசியை போக்கி விட முடியாது. மதத்தைச் சொல்லி மக்களின் துயரங்களை துடைத்து விட முடியாது. மந்திரியாக பதவி வகித்த மாணிக்கவாசகர் பதவியை துறந்து விட்டு வந்து சிவனடியார் ஆனார். பின்னர் திருவாசகம் பாடினார். ஆட்சியில் அமர வேண்டிய கௌதமர்....அதனைத் துறந்து விட்டு வந்து போதி மரத்தடியில் அமர்ந்து புத்தரானார். புட்டுக்கு மண் சுமந்த சிவன்.....சுமக்க வைத்தவன் பாண்டிய மன்னன். முன்னது ஆன்மீகம் பின்னது அரசியல்! ஒன்றே குலம் ஒருவனே தேவன் என்றார் பேரறிஞர் அண்ணா! அதுதான் இன்றைய முதல்வரின் கொள்கையுமாகும். அந்த நெறிவழி வருவதுதான் திராவிட அரசியல். மனிதர்களிடையே சமத்துவமும் சமநீதியும் உண்மையாகவே மலரும் போது தான் அந்த தேவனின் மனமும் கனியும் களிப்படையும்! அதனை அடைவது தான் திராவிட அரசியல்.

வி.செ.குகநாதன்
திரைப்பட இயக்குநர்